இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 08-03-2024

# போதையின் தலைநகர் குஜராத்

போதைப் பொருள் தடுப்பு வழக்கில் தேடப்படும் நபர் ஒருவர் கட்சியில் இருந்தார். இதனை அறிந்ததும் அவர் நீக்கப்பட்டு விட்டார். தவறான நபர் என்று புகார் வந்ததும் அவரைக் கட்சியை விட்டு நீக்குவதற்கு தி.மு.க. தயங்கவில்லை. உடனே, தமிழ்நாட்டில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகமாகி விட்டதாக பொய்ப் புகார்களைக் கிளப்புகிறார்கள். இதையே பிரதமர் மோடியும் சொல்லி இருக்கிறார்.

“ஆட்சியில் இருக்கும் கட்சியின் ஆதரவில் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இது என் மனதை வருத்தமடையச் செய்துள்ளது. போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மீது பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும் என்பதே மோடியின் உத்தரவாதம்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர்.

**நாட்டிலேயே அதிகமான போதைப் பொருள் விற்பனையாகும் மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்தான் என்கிறது ஒரு புள்ளிவிபரம். கடந்த ஆண்டு டிசம்பர் 13 ஆம் தேதி மாநிலங்களவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இது இருக்கிறது.** இந்தியாவில் உள்ள 28 மாநிலங்களில் ராஜஸ்தானில்தான் அதிகமான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இது பா.ஜ.க. ஆளும் மாநிலம் ஆகும்.

★ **ராஜஸ்தான்**

★ **பஞ்சாப்**

★ **மத்தியப்பிரதேசம்**

★ **ஜார்கண்ட்**

★ **மணிப்பூர்**

★ **குஜராத்**

★ **அரியானா**

★ **பீகார்**

★ **மேற்கு வங்கம்**

★ **உத்திரப்பிரதேசம்** - ஆகிய பத்து மாநிலங்களில்தான் அதிகமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஏழு மாநிலங்கள் பா.ஜ.க. ஆளும், ஆளும் கூட்டணியில் இருக்கும் மாநிலங்கள். பிரதமர் மோடியின் உத்தரவாதம் ஏன் அங்கு செயல்படுத்தப்படவில்லை?

அந்த மாநிலத்தில் போய் போதை மருந்து ஒழிப்பு பற்றி பேசுகிறாரா பிரதமர்?

**போதை மருந்துக்கு தலைநகரே குஜராத் மாநிலம்தான்.**

**இந்தியாவில் போதைப் பொருள் கடத்தலின் தலைநகராக இருப்பது குஜராத் மாநிலம்தான். கடந்த 1ஆம் தேதியன்று குஜராத்தில் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சிறிய வகை கப்பலில் கொண்டு வந்துள்ளார்கள். 3,300 கிலோ எடை கொண்ட போதைப் பொருட்கள் இவை. ஐந்து பேரைக் கைது செய்தது காவல் துறை. இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து போதைப் பொருள் விற்கும் அளவுக்கு ‘பாதுகாப்பான’ மாநிலமாக குஜராத் இருக்கிறது.**

கடந்த செப்டம்பர் மாதம் குஜராத் மாநிலம், ராஜ்கோட் நகருக்கு அருகில் உள்ள மிதி ரோகர் என்ற கிராமத்தில் ஒரு கிலோ எடையில் 80 பாக்கெட்டுகள் கிடந்தன. பொதுமக்கள் பார்த்து போலீஸுக்கு சொன்னார்கள். 2022, 23 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் குஜராத்தில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்து ரூ.4 ஆயிரம் கோடிக்கும் அதிகமான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்திருப்பதாக அந்த மாநில அரசே சொல்லி இருக்கிறது. பறிமுதல் செய்யப்பட்டதே இவ்வளவு என்றால் - புழக்கத்தில் விடப்பட்டது எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இருக்கும்?

2017 - 21 ஆகிய ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.2.5 லட்சம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் குஜராத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது. குஜராத் உள்துறை அமைச்சர் ஹார்ஸ் சங்வி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் 3 போதை மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டது. போதை மருந்துகள் அதிகம் வந்து இறங்குவது முந்த்ரா துறைமுகத்தில் என்று செய்திகள் வருகின்றன.

குஜராத் மாநில கடற்பகுதியில், ஒரு கப்பலில் இருந்து 1,500 கிலோ ஹெராயினை இந்திய கடலோரக் காவல் படை அதிகாரிகள் 2017 ஆம் ஆண்டு கைப்பற்றினார்கள். ஒரு வணிக கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்த ஹெராயினின் மதிப்பு கிட்டத்தட்ட 550 மில்லியன் டாலர் இருக்கும் என கடலோரக் காவல்படை அறிக்கையே வெளியிட்டது. **“இவ்வளவு போதைப் பொருள்கள் ஒரே நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறை”** என்று கடற்படை செய்தித் தொடர்பாளர் டி.கே.சர்மா சொன்னார்.

ஹெராயினின் முக்கிய மூலப்பொருளாக ஓபியம் உள்ளது. **உலகின் மிகப்பெரிய ஓபியம் உற்பத்தியாளர்களால் ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவிற்குள் குஜராத் வழியாக வருகிறது. ஆப்கானிஸ்தானில் தயாராகும் ஹெராயின்கள், இந்தியப் பெருங்கடல் வழியாக கிழக்கு மற்றும் தெற்கு ஆப்ரிக்காவுக்குக் கடத்தப்படுவதாக ஐ.நா.வின் போதைப் பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகம் கூறுகிறது.** வட மாநிலமான பஞ்சாப், ஹெராயினால் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

2021 ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள முந்திரா துறைமுகத்துக்கு ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள போதைப் பொருள் வந்து இறங்கியது. 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிகப்பெரிய போதைப் புதையலை குஜராத் காவல்துறையினர் பிடித்தார்கள். அவர்கள் நடத்திய சோதனையில் குஜராத் கடற்கரைக்கு அருகே கடத்தல் படகு பிடிபட்டது. அதில், சாக்குப் பைகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா, மெத்தாம்பிடமைன் மற்றும் ஹெராயின் போன்ற போதைப் பொருட்கள் 760 கிலோ கண்டுபிடிக்கப்பட்டன. இதன் சர்வதேச மார்க்கெட் விலை ரூ.2,000 கோடி. அண்டை நாட்டில் இருந்து செயல்படும் போதை கடத்தல் கும்பல், இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு கடல் மார்க்கமாக போதைப் பொருட்களை சப்ளை செய்து வருகின்றன என்று அறியப்பட்டது.

சமீப காலமாக குஜராத் துறைமுகங்களைப் பயன்படுத்தி போதைப் பொருள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்; **“குஜராத்தில் பல கோடி மதிப்புள்ள போதைப் பொருள்கள் அங்கு தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன, கண்மூடித்தனமாக போதைப்பொருள் வியாபாரம் செய்யும் இவர்கள் யார்? இந்த மாபியாக்களுக்கு எந்த ஆளும் சக்திகள் பாதுகாப்பு கொடுக்கிறார்கள்?”** என அப்போதே கேள்வி எழுப்பினார். ஆனால் பதில் சொல்வதற்குத்தான் யாரும் இல்லை!

**இப்படிப்பட்ட செய்திகளை மறந்து விட்டுத்தான் பிரதமர் நீலிக்கண்ணீர் வடிக்கிறார். குஜராத் முந்திரா துறைமுகத் தகவல்கள் ஏன் அவரை வருத்தமடைய வைக்கவில்லை?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துவ தேவாயலங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி விஜிலா சத்தியானந்த், துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள போதகர் ஆர். தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஐ. ரோஸ்லின் ஜீவா, ஜான் பிரகாஷ் எபினேசன், எம். சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி. மோகன்தாஸ், போதகர் டி. சோபித்தராஜ், சி. ஜெபநேசர் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உள்ளனர்.

### கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் - பணியாளர் நல வாரியத்திற்கு நியமிக்கப்பட்ட

## புதிய நிர்வாகிகள் முதல்வரைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 8-**

**கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்திற்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர், துணைத் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றனர்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கிறித்துவ பெருமக்கள், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிறித்துவ பெருமக்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்க ஆணையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, கிறித்துவ நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், உறுப்பினர்கள் பதிவு செய்தல், நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகளும், படிவங்களும் அரசாணை மூலம் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

இந்நலவாரியத்திற்கு புதியதாக நியமனம் செய்யப்பட்ட தலைவர் திருமதி. விஜிலா சத்யானந்த், துணைத் தலைவர் போதகர் ஆர்.தயாநிதி மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஐ.ரோஸ்லின் ஜீவா, ஜெ. ஜான் பிரகாஷ் எபினேசன், எம்.சத்திய பால்ராஜ், ஏ. ஜோசப் ஸ்டாலின், எம். நிக்சன், மறைதிரு எஸ். சாமுவேல் புனிதராஜ், பி. பிரபாகர், பிரேம்குமார் ராஜாசிங், மறைதிரு வி. பிரேம் கிறிஸ்துதாஸ், பி. சாமுவேல் கிருபாகரன், பிஷப் டாக்டர் பி.மோகன்தாஸ், போதகர் டி.சோபித்தராஜ், மறைதிரு சி. ஜெபநேசர் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் நேற்று (7.3.2024) சந்தித்து, நன்றி தெரிவித்து, வாழ்த்துப் பெற்றார்கள்.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

### 9 வயது சிறுமியை பாலியல் கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து

## புதுச்சேரி தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 8-*

பெண்ணுரிமை, பெண்குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சியின் அவலத்தைப் பார்த்து உலகமே சிரிக்கிறது.

புதுச்சேரியில் 9 வயது சிறுமி பாலியல் கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்டதை எதிர்த்து புதுச்சேரி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் புதுச்சேரி மாநிலத்தில் - பா.ஜ.க.வின் மாநில முன்னாள் தலைவரும் - மகளிருமான டாக்டர் தமிழிசை துணை நிலை ஆளுநராக பொறுப்பு வகித்து வரும் புதுச்சேரி மாநிலத்தில் முத்தியால் பேட்டை பகுதியில் 9 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததுடன், அச்சிறுமியை கழுத்தை நெரித்து படுகொலை செய்து வேட்டியில் மூட்டையாக கட்டி சாக்கடை கால்வாயில் தூக்கி வீசியுள்ள இரக்கமற்ற - இதயமற்ற கொடுமை நடந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

**இதுதான் மோடி அரசின் சாதனையா....?**

இந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்ணுரிமை, பெண் குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சி நடக்கும் மாநிலத்தில், அதுவும் மூச்சுக்கு முன்னூறு முறை “பா.ஜ.க.வில் பெண்ணுரிமை” கூவும் புதுச்சேரி ஆளுநர் டாக்டர் தமிழிசை ஆளுநராக உள்ள



மாநிலத்தில், உலகத்தில் எங்கும் நடைபெறாத ஒரு அவலம்- அதுவும் பெண் சிறுமிக்கு கொடுமை நடந்துள்ளது.

**இதுதான் பா.ஜ.க. கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா?**

2024 ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் “பெண் குழந்தைகள் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது” என்று தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டார். இதுதான் பா.ஜ.க.வினர் கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா...? என கேட்கிறேன்.

அத்துடன், “உலகத்தையே பா.ஜ.க. ஆட்சிதான், இந்தியாவின் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது” என்று புளுகிக் கொண்டிருக்கும் பா.ஜ.க. கட்சியினரே, நீங்கள் சொல்வது உண்மைதான். ஒன்பது வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து, கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்ட இந்நிகழ்வைப் பார்த்துதான் உலகமே, பா.ஜ.க. ஆளும் புதுச்சேரி மாநிலத்தின் பக்கம் திரும்பி காறி உமிழ்ந்து கொண்டிருக்கிறது. புதுச்சேரி பா.ஜ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த பாலியல் வன்கொடுமை உலகிற்கே படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்திய பிரதமர் மோடி அவர்கள், இந்தியா முழுவதும் பெண் குழந்தையை காப்பாற்றவும், பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கவும் 2015-ல் பிரதமர் மோடி அவர்கள் துவக்கிய “பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ” திட்டத்தை துவக்கினார். ஆனால் இன்று பா.ஜ.க. ஆட்சியில் நடப்பதோ பாலியல் வன்கொடுமை - அதுவும் சின்னஞ்சிறு சிறுமியின் மனிதாபிமானமற்ற கொலை!

**பாரதியார் உலவிய மண்ணில் அவலம்!**

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்று முழக்கமிட்ட மகாகவி பாரதி உலவிய மண்ணில், ஒரு பெண் சிறுமிக்கு ஏற்பட்ட பாலியல் வன்கொடுமையை, காட்டுமிராண்டித்தனமான கொலையையும்- பெண்களை பாதுகாக்கத் தவறிய பா.ஜ.க. ஆட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுங் கண்டனத்தை தெரிவிப்பதோடு, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பி.சுப்பிரமணியன் தலைமை! சு.சுப்பிரமணியன் முன்னிலை! கலைஞர் நூற்றாண்டு விழா!

## திருநெல்வேலி மத்திய மாவட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு - திண்டுக்கல் லியோனி - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

*நெல்லை, மார்ச் 8 -*

திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, கழக இளைஞர் அணி மாநாடு தீர்மான விளக்க பொதுக்கூட்டம், மார்ச் 1 பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா, 1800 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (9.3.2024 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் திருநெல்வேலி சந்திப்பு, சிந்துபூந்துறையில் நெல்லை மத்திய மாவட்ட கழக துணைச்செயலாளர் எஸ்.வி.சுரேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தச்சை பகுதி கழக செயலாளர், முன்னாள் மண்டல தலைவர் பி.சுப்பிரமணியன் எம்.சி., தலைமை வகிக்கிறார்.

நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், எஸ்.வி.பொன்னையா பாண்டியன், செ.பாலமுருகன் [எ] பிரபு, வி.எஸ்.அப்துல் கையூம், சுதாமூர்த்தி எம்.சி., பூக்கடை பி.அண்ணாதுரை, ஐஸ் மூக்கன், எஸ்.கண்ணையா, பொன். தங்கராஜ், எஸ்.ராஜேந்திரன், கிருஷ்ணவேணி, ஆஞ்சிஸ், சுடலை சிவா, சுந்தரவேலன்,ஜீவன் மாரியப்பன், முருகன், விஷ்ணு, பாலமுருகன், மு.காதர் ஒலி, பாலன் (எ) ராஜா, பி.ராஜ வர்மன், குண்டு பாண்டியன், மலைப் பாண்டியன், எஸ். ரமேஷ், வள்ளியம்மாள், ஐயப்பன், தில்லை ரமேஷ், ஏ.சிவனு பாண்டியன், சங்கர், சுரேஷ், கண்ணன், சுடலைமணி, முருகன், சீனிவாசன், சுடலை முத்து, லியாகத் அலிகான், குமார், பாஸ்கர், சரவணன், பா.செல்வம், பாலகிருஷ்ணன், வினோத், வரதன், முத்துவேல்மணி கண்டன், பாபு, துர்க்காராம், வேம்பு விவேக், வேகை விசு, நவீனா முத்துக் குமார், ஆயிரம் செல்வம், மாலா, பேச்சிமுத்து, அக்பர் அலி, பே விசு, சரவணன், தக்சை நம்பிராஜன் முத்துவேல், ஐயன் சுப்பையா, அக்பர் அலி, ராஜேஷ், முருகேசன், நயினா கண்ணன், மு.வள்ளியின்செல்வன், கிட்டுப் பிள்ளை, தர்மநீலக்குமார், அசன், சதீஷ், தங்கராஜ், குருநாதன், விஸ்வ நாதன், அந்தோணி, பெயிண்டர் சீனி, பிரபு, நம்பி, எஸ். வி.ராஜா, தளவாய், ராமர், பிச்சுமணி, வசந்த், பாலாஜி, செல்வமணி, வேந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோகுலவாணிசுரேஷ் வரவேற்கிறார். நெல்லை மு.முத்தையா தொகுப்புரையாற்று கிறார்.

இக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி அமைச்சர் தங்கம் தென்னரசு, திண்டுக்கல் ஐ. லியோனி, மாவட்டக் கழக பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., சா. ஞானதிரவியம் எம்.பி., ஹெலன் டேவிட்சன், வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.



திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளான மார்ச்–1 அன்று பிறந்த 30க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தங்கமோதிரம் அணிவித்து பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., டாக்டர் அரிகரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், கோல்டு எஸ்.பிரபு உட்பட பலர் உள்ளனர்.